முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 651**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. சிவராஜயோகியே அரங்கா போற்றி
சித்தி முத்தி தந்தருளும் தேசிகா போற்றி
அவதாரம் என் சக்தியாக உலகில் கொண்டு
அண்ணலாக அறமாக வந்த ஞானதேசிகனே போற்றிபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்கூட்டி அரங்கனுக்கு நித்தம் நித்தம்
ஆறுமுகன் யான் ஆக்கம் தந்து வருதல் காண
3. காணவே அரங்கனின் கொள்கைகள்
கருணையாக உலகமெங்கும் நிரம்பி
ஞானமாகப் பரவி கலியுகத்தை
நலிவினின்று ஞானயுகமாக மாற்றம் செய்யும்
4. செய்யவே அரங்கனை தொடர்ந்து வரும்
சீடர்படைகளை கொண்டே இந்த அற்புதத்தை
ஐயன் முருகன் யான் இனிதே நடத்துவேன்
அரங்கன் தவத்திற்கு சித்தி தரும் வண்ணம்
5. வண்ணமுடன் ஆறுமுகப்பெருமான் யான்
வல்லமைகூட்டி எண்ணம்வழி உலகோர்க்கு
அரங்கன் தீட்சையாக ஞானம் அருளி
ஈடேற்றுவேன் இந்த கலியுகத்தை ஞானயுகமாக
6. ஆகவே அரங்கன் தர்மத்தின் பலமாக
அரங்கனின் அருள்பலமாக இனிதே
யுகமெங்கும் ஓங்கார சக்தி பரவி
இந்த உலகம் பெருமாற்றம் இனிதே காணக்கூடும்
7. கூடவே அரங்கனை தொடர்ந்து வாரீர்
குடிலின் தர்மத்தில் பங்களித்து
நாடெங்கிலும் என் அவதார அரங்கன் ஞானப்புகழை
நன்மை கருதி உலகோர் பரப்பி வருக
8. வருகவே கலியின் துன்பங்களோடும்
வருகின்ற சக்திமூலம் இனிதே
தர்மபலமாகி இந்த பேருலகம்
தணிகாசலன் என் ஆளுமைக்குக் கீழ்வரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–